பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 06 2025 **TUESDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதத்தை ஒருபோதும் சகித்துக்கொள்வதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை ஆபரேஷன் சிந்தூர் உலகிற்கு உறுதிபட தெரிவித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் பொருளாதாரமும், உள்கட்டமைப்பும் விரைவான வளர்ச்சி கண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

3. உற்பத்தித்துறையில் வரிச்சுமையை குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் 11-ஆவது கட்டமாக ஈரானிலிருந்து இன்று 286 பேர் விமானம் மூலம் புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

5. ஈரான் - இஸ்ரேல் இடையிலான சண்டை நிறுத்தம் தற்போதும் நடைமுறையில் உள்ளதால் இருதரப்பிலும் பாதிப்பு குறித்த அச்சம் தேவையில்லை என அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

தீவிரவாதத்தை ஒருபோதும் சகித்துக்கொள்வதில்லை என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை உலகிற்கு உறுதிபட தெரிவித்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீநாராயண குரு, தேசப்பிதா மகாத்மா காந்தி ஆகியோர் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர், இந்திய மக்களுக்கு ஊறு விளைவிப்போருக்கு எந்த இடத்திலும் பாதுகாப்பு இல்லை என்பதை இது உணர்த்தியிருப்பதாகவும் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான முடிவுகள் நாட்டு நலனை அடிப்படையாக கொண்டு நேர்மையான முறையில் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளிலிருந்து ராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் நிலை படிப்படியாக குறைந்து வருவதாக கூறிய பிரதமர், பாதுகாப்புத்துறையில் சுயசார்பு நிலையை எட்டுவதற்கான முயற்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை 22 நிமிடங்களிலேயே எதிரிகளை அடிபணிய வைத்ததை ஆதாரப்பூர்வமாக நிரூபித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த நடவடிக்கையில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ராணுவ தளவாடங்களை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா உற்பத்தி செய்யும் ராணுவ தளவாடங்களுக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<>>>>>>

உற்பத்தித்துறையில் வரிச்சுமையை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தனியார் வங்கி சார்பில் நடைபெற்ற வர்த்தக கருத்தரங்கில் உரையாற்றிய அவர், அரசு மேற்கொண்டுள்ள வரிச்சுமையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் உற்பத்தித்துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்றும், ஏற்றுமதிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் கூறினார்.

கடந்த ஆண்டை காட்டிலும், ஏற்றுமதியின் அளவு ஆறு சதவீதம் உயர்ந்திருப்பதாக கூறிய அவர், இதுவரை இல்லாத அளவிற்கு 825 பில்லியன் டாலர் அளவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த உலகின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் நான்கு சதவீதம் அதிகரித்துள்ள போதிலும், இந்தியாவின் வளர்ச்சி விகிதம் ஆறு புள்ளி மூன்று சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

பல நாடுகளுடன் இந்தியா செய்து கொண்டுள்ள தாராள வர்த்தக ஒப்பந்தங்கள், நாட்டின் எதிர்கால ஏற்றுமதியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாட்டில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், பயிர் வாரியான விழிப்புணர்வு இயக்கம் நாளை மறுநாள் தொடங்கப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த அவர், மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் சோயாபீன் உற்பத்தியை பெருக்குவதற்கான விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட உள்ளதாக கூறினார்.

இதில் விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இந்த இயக்கம் மேற்கொள்ளப்படும் என்று கூறிய அவர், பருத்தி, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான விழிப்புணர்வு இயக்கமும் தொடங்கப்பட உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த இயக்கத்தின்போது, பயிர் சாகுபடி குறித்த தகவல்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு மேற்கொள்ளப்படும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாட்டின் உணவு பதப்படுத்தும் தொழில்துறை கடந்த சில ஆண்டுகளில் பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான், நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர், உணவு பதப்படுத்தும் தொழில்துறை தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

கிராமப்புற தொழில்முனைவோருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், இந்த துறை முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த கட்டுரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி உணவு பதப்படுத்தும் தொழில்துறையை மேம்படுத்த அளித்துவரும் ஆதரவை பகிர்ந்துள்ள திரு சிராக் பாஸ்வான், உள்ளார்ந்த வளர்ச்சியையும், வேளாண்மை மற்றும் தொழில்துறை இணைப்பையும் உறுதி செய்வதுடன், உலகளாவிய சந்தைப்படுத்துதலுக்கு உணவு பதப்படுத்தும் துறை வழிவகுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் கடந்த பத்தாண்டு கால ஆட்சியில், நாட்டின் பொருளாதாரமும், உள்கட்டமைப்பும் விரைவான வளர்ச்சியை பெற்றுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் முசாபர்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியா பொருளாதார வளர்ச்சியில் உலகின் நான்காவது இடத்திற்கு முன்னேறியிருப்பதாக தெரிவித்தார்.

உலகின் 11 பெரிய பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகள் பட்டியலில் இந்தியா இடம்பிடித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இளைஞர்களுக்கு அதிக அளவில் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக்கொள்கை இளைஞர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவதற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனநாயக மாண்புகளை மக்கள் அறிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

லோக் நாயக் ஜெயபிரகாஷ் நாராயணனின் ஜனநாயக சிந்தனைகளை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் அவசரநிலை பிறப்பிக்கப்பட்டபோது, ஜனநாயக உரிமைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை நினைவுகூறும் வகையில் நாளை **'Samvithan Hatya '** தினம் கடைபிடிக்கப்படுவதாகவும், இதனால் ஜனநாயகம் வலுப்பெறும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் மாம்பழ விலை வீழ்ச்சியை ஈடுசெய்யும் வகையில், சந்தை தலையீட்டுத் திட்டத்தை செயல்படுத்துமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் ஆகியோருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மாநிலத்தில் மாம்பழத்தின் விலை கிலோ ஐந்து ரூபாய்க்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மாம்பழக்கூழ் நிறுவனங்களிடமிருந்தும் தமிழக விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மாம்பழச்சாறு பானங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் 'FSSAI ' தர நிலைகளை பின்பற்றுவதை உறுதி செய்யும் வகையில், வழிகாட்டு முறைகளை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மாம்பழக்கூழுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை 12 சதவீதத்தில் இருந்து, ஐந்து சதவீதமாக குறைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் மட்டுமின்றி, மாம்பழம் உற்பத்தி செய்யும் அனைத்து மாநிலங்களில் உள்ள விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு திரு மு.க.ஸ்டாலின், பிரதமருக்கும், வேளாண் அமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

கார்கில் போர் நினைவுதினத்தையொட்டி, இந்த போரில் நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர்களை போற்றும் விதமாக, இந்திய ராணுவம் சார்பில் அவர்களது குடும்பத்தினருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த பூச்சிமலைகுப்பம் கிராமத்தை சேர்ந்த வீரர் பழனியின் குடும்பத்தினருக்கு, கார்கிலில் பணியாற்றும் நாயக் சுபேதார் கிங்ஸ்லின் உள்ளிட்ட ராணுவ அதிகாரிகள் இன்று நினைவு பரிசு வழங்கி மரியாதை செலுத்தினர்.

<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் 11-ஆவது கட்டமாக இன்று 286 பேர் ஈரானிலிருந்து மீட்கப்பட்டு விமானம் மூலம் புதுதில்லி வந்துசேர்ந்தனர்.

இத்தகவலை தெரிவித்த வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்க்ரீட்டா, இதில் இலங்கையை சேர்ந்த மூன்று பேரும், நேபாளத்தை சேர்ந்த இரண்டு பேரும் அடங்குவர் என்று தெரிவித்தார்.

ஈரானிலிருந்து மீட்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை அரசு செய்துதரும் என்றும் அவர் கூறினார்.

இதுவரை ஈரானிலிருந்து 2 ஆயிரத்து 580 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இஸ்ரேலிலிருந்து மூன்று விமானங்கள் மூலம், 594 இந்தியர்கள் மற்றும் ஆறு வெளிநாட்டவர் அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் திரு பபித்ரா மார்க்ரீட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஈரான் - இஸ்ரேல் இடையிலான சண்டை நிறுத்தம் தற்போதும் கடைபிடிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இஸ்ரேல் மேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தாது என்றும், அந்நாட்டின் அனைத்து போர் விமானங்களும் திரும்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஈரானும் நட்பு ரீதியாக தாக்குதலை கைவிட்டு, சண்டை நிறுத்தத்திற்கு உடன்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சண்டை நிறுத்தம் தற்போதும் நடைமுறையில் உள்ளதால் இருதரப்பிலும் பாதிப்பு குறித்த அச்சம் தேவையில்லை என திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இஸ்ரேலும், ஈரானும் போர் நிறுத்தத்தை மீறி விட்டதாக அமெரிக்க அதிபர் தெரிவித்திருந்தார்.

<<<<<>>>>>